செ.வெ.எண்: 504/2016 நாள்: 08.08.2016

# செய்திக்குறிப்பு

**கன்னியாகுமரி மாவட்டக் கலை மன்றம் வாயிலாக 2013-2014, 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளுக்கான மாவட்ட அளவில் சிறந்த பதினைந்து கலைஞர்களுக்கு விருதுகள்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சவான்.,இ.ஆ.ப. அறிவிப்பு**

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் கன்னியாகுமரி மாவட்டக் கலை மன்றத்தின் வாயிலாக 2013-2014, 2014-2015 மற்றும் 2015-2016ஆம் ஆண்டுகளுக்கு மாவட்ட அளவில் அகவை மற்றும் கலைப்புலமையின் அடிப்படையில் சிறந்த 15 கலைஞர்கள், விருதுகள் வழங்கிடத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விருதுகளை தமிழ்நாட்டின் கலைப் பண்புகளை மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் நோக்கிலும் கலைஞர்களின் கலைத்திறனை சிறப்பிக்கும் வகையிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் செயல்பட்டு வரும் மாவட்டக் கலை மன்றங்களின் வாயிலாக 2002-2003ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் சிறந்த ஐந்து கலைஞர்களுக்கு கலை விருதுகள் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

இவ்வாணையின்படி 2002-2003ஆம் ஆண்டு முதல் 2012-2013ஆம் ஆண்டு வரை கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரையில் பல கலைத் துறைகளில் சிறந்து விளங்கும் 55 கலைஞர்களுக்கு கலை விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

2013-2014, 2014-2015 மற்றும் 2015-2016ஆம் ஆண்டுகளுக்கு விருதுகள் வழங்க செய்தித்தாள் வாயிலாக விளம்பரம் செய்து பெறப்பட்ட விண்ணப்பங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சவான் அவர்கள் தலைமையில் **04-08-2016** அன்று நடைபெற்ற தேர்வுக் குழுக் கூட்டத்தில் திருநெல்வேலி மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் திரு.மு.க.சுந்தர், கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு.ப.சொக்கலிங்கம், கன்னியாகுமரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சையத் முகமத், கன்னியாகுமரி சுற்றுலா அலுவலர் திரு.கா.நெல்சன் மற்றும் வில்லிசைக் கலைஞர் கலைமாமணி திரு.பி.முத்துசுவாமி புலவர், நாடகக் கலைஞர் கலைமுதுமணி திரு.இரணியல் கலைத் தோழன், ஓவியக் கலைஞர் கலைநன்மணி திரு.வை.கோபாலகிருஷ்ணன், பரத நாட்டியக் கலைஞர் கலைவளர்மணி திரு.த.ஜாண் அலெக்ஸாண்டர் ஆகியோரால் பரிசீலனை செய்யப்பட்டு மாவட்ட அளவில் சிறந்த கலைஞர்களாக, வயது மற்றும் கலைப்புலமை அடிப்படையில் கீழ்க்காணும் கலைஞர்களைத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

2013-2014ஆம் ஆண்டு

| வ.எண. | கலைப் பிரிவு | பெயர் மற்றும் முகவரி | கலைப் பிரிவு |
|---|---|---|---|
| 1. | கலை இளமணி | செல்வி.எஸ்.வி.அனுஸ்ரீ | புரதநாட்டியம் |
| 2. | கலை வளர்மணி | திரு.ஆர்.சிவராமன் | ஓவியம் |
| 3. | கலைச்சுடர்மணி | திரு.சி.பி.ராஜ் | நாடகம் |
| 4. | கலைநன்மணி | திரு.ஏ.நாணப்பன் | சிலம்பாட்டம் |
| 5. | கலைமுதுமணி | திரு.ம.மரிய இருதயம் | நாடகம் |

2014-2015ஆம் ஆண்டு

| வ.எண். | கலைப் பிரிவு | பெயர் மற்றும் முகவரி | கலைப் பிரிவு |
|---|---|---|---|
| 1. | கலை இளமணி | செல்வி.எஸ்.பி.வர்ஷா | பரத நாட்டியம் |
| 2. | கலை வளர்மணி | செல்வி.ச.ரம்யா | பரத நாட்டியம் |
| 3. | கலைச்சுடர்மணி | திரு.பி.கே.சுப்பிரமணியம் | நாதசுரம் |
| 4. | கலைநன்மணி | திரு.ஏ.சந்திரன் | ஓவியம் |
| 5. | கலைமுதுமணி | திரு.பி.ராமசாமி ஆசான் | சிலம்பாட்டம் |

2015-2016ஆம் ஆண்டு

| வ.எண். | கலைப் பிரிவு | பெயர் மற்றும் முகவரி | கலைப் பிரிவு |
|---|---|---|---|
| 1. | கலை இளமணி | செல்வி.எஸ்.ஆர்.பத்மிதா | பரத நாட்டியம் |
| 2. | கலை வளர்மணி | திரு.ஏ.வெங்கடேஷ் குமார் | வில்லிசை உடுக்கை |
| 3. | கலைச்சுடர்மணி | திருமதி.எஸ்.வசந்தகுமாரி | வில்லிசை |
| 4. | கலைநன்மணி | திரு.பி.டி.மனோகரன் | நாதசுரம் |
| 5. | கலைமுதுமணி | திரு.கே.கோபால கிருஷ்ணன் (எ) திப்பிரமலை | நாடகம் |

மேற்படி விருதுகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட கலைஞர்களை, கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விருதுக்கான பொற்கிழி, பட்டயம் மற்றும் பொன்னாடை வழங்கி கௌரவிப்பார்கள் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சஜ்ஜன் சிங் ரா. சவான்.,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.